## நாமக்கல் தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
### பிறப்பிப்பவர்: திரு. எஸ். கண்ணன் ,பி.எஸ்ஸி., (தோ).,

எண்.அ1/1743/2019

நாள்:06.11.2019

பொருள் பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி IV ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் தோட்டக்கலை துறைக்கு பணிநியமனம் ஆணை வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை 1)சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை அவர்களின் செ.மு. ஆணை எண்:அநிபி5/139388/2019 நாள்:05.03.2019

2)சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆணை எண்:அபபி2/4193/2019 நாள்:07.03.2019

3)சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களது க.எண்: அபபி3/51257/16 நாள்:04.05.2016

4)சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆணை எண்:அபபி4/4242/2015 நாள்:31.05.2016

*****

ஆணை:

சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் தொகுதி IV ல் அடங்கிய இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு பணிகள் நேரடித் தேர்வு மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு பார்வை (1) இல் காணும் செயல் முறை ஆணையின் மூலம் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (2)இல் காணும் செயல்முறை ஆணையின் படி பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்கண்ட பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) பதவியில் ரூ19500-62000/-(Level-8) என்ற ஊதிய விகிதத்தில் அவருக்கெதிரே குறிப்பிடப்பட்ட தேதியில் பணியில் சேர்ந்து கொண்டனர்.

பார்வை (4)இல் காணும் சென்னை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின் படி கீழ்காணும்

பணியாளர்களின் பணியினை இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் கலம் (4) இல் கண்டுள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.



| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | மா.சத்யா<br>இளநிலை உதவியாளர் | 11.03.2019<br>முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 2 | ப.கலாமணி<br>இளநிலை உதவியாளர் | 12.03.2019<br>முற்பகல் | 12.03.2019 முற்பகல் |
| 3 | மு.தமிழரசி<br>இளநிலை உதவியாளர் | 13.03.2019<br>முற்பகல் | 13.03.2019 முற்பகல் |

மேற்கண்ட இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு கால தொடர்பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார்.

1) இப்பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்திற்கு இளநிலை உதவியாளருக்கான பவானிசாகர் ஆதாரப் பயிற்சி முடிக்க வேண்டும் எனவும், அவ்வாறு ஆதாரப் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னரே இரண்டாவது மற்றும் அதற்கடுத்த ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் எனவும் ஆணையிடப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்,
நாமக்கல்.

பெறுநர்:
மேற்கண்ட பணியாளர்கள்
நகல்: சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: செயல்முறை ஆணை கோப்பிற்கு
நகல்:பணிப்பதிவேடு